வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 20.04.2026 திங்கட்கிழமை இதழ் : 104 பக்கங்கள் : 08

# இலங்கைத் தமிழ் மக்களுக்கு இந்தியா என்றும் உறுதுணை!

## உறுதியளித்தார் இந்திய துணை ஜனாதிபதி



கொழும்பு, ஏப். 20

இலங்கைத் தமிழ் மக்களுக்கு இந்திய அரசு என்றும் உறுதுணையாக இருக்கும் என்றும், இருநாடுகளுக்கிடையேயான நட்பு மற்றும் ஒத்துழைப்பு தொடர்ந்தும் வலுப்பெறும் என்றும் இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணன் உறுதியளித்தார்.


கொழும்பில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் இந்திய வம்சாவளித் தமிழர்களால் அளிக்கப்பட்ட மிகப்பெரிய வரவேற்புக்கு இந்திய துணை ஜனாதிபதி தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அவர், இந்திய வீடமைப்பு திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை மக்களுக்கு வழங்கியதை குறிப்பிட்டார். இன்று வழங்கப்பட்ட 145 வீடுகளுடன் சேர்த்து, மூன்றாம் கட்டத்தின் கீழ் மொத்தம் 4,000 வீடுகள் பயனாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், இதுவரை இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்காக இந்திய அரசு மொத்தம் 50,000 வீடுகளை

07

## ஜனாதிபதி அநுரவை சந்தித்த இந்தியத் துணை ஜனாதிபதி!



கொழும்பு, ஏப். 20

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஸ்ணன் மற்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆகியோருக்கிடையிலான

07

# இந்திய துணை ஜனாதிபதியுடன் நேற்று தமிழ்த் தேசியக் கட்சிகள் முக்கிய பேச்சு

## மலையகக் கட்சிகளும் கலந்துரையாடல்

கொழும்பு, ஏப். 20

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியத் துணை ஜனாதிபதி சி. பி. ராதாகிருஷ்ணன், இலங்கையின் தமிழ் தேசிய கட்சிகள் மற்றும் மலையக தமிழ்க் கட்சிகளின்

07



## ரஷ்யாவிடமிருந்து இலங்கைக்கு சலுகை விலையில் எரிபொருள்!

கொழும்பு, ஏப். 20

ரஷ்ய எண்ணெய் விற்பனைக்கு அமெரிக்கா மேலும் ஒரு மாத கால அவகாசம் வழங்கியுள்ளதால், ரஷ்யாவிடமிருந்து சலுகை விலையில் எரிபொருளைக் கொள்வனவு செய்யும் சாதகமான சூழல் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது என அரச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உடன்படிக்கைகளின் கீழ், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் குறைந்த விலையில் எரிபொருள் மற்றும் நிலக்கரியை வழங்க ரஷ்யா ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளதையும் அரச ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

07

## அமைச்சர் ஜயக்கொடியின் பதவி விலகல் ஒரு நாடகம்!

### நிலக்கரி மோசடியில் அரசை சாடுகின்றன எதிர்க்கட்சிகள்

கொழும்பு, ஏப். 20

நிலக்கரி மோசடி தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைக்கு உதவுவதற்கே வலுசக்தி அமைச்சர்பதவி விலகியதாக தெரிவிப்பது போலித்தனமான காரணமாகும். அத்துடன் நிலக்கரி கொள்வனவு பொறுப்பை அமைச்சரின் மீது மட்டும் சுமத்திவிட்டு, அரசாங்கம் முற்றாக

07

## ஒற்றுமைக்கான முயற்சியை தமிழ்க் காங்கிரஸ் தகர்த்தது!

### தமிழரசுக் கட்சி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 20

தமிழ்த் தேசியக் கட்சிகள் இடையே தீர்வு தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட ஒற்றுமை முயற்சியை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தகர்த்திருக்கின்றது என்று தெரிவித்து அது தொடர்பில் விசனம் வெளியிட்டிருக்கின்றது இலங்கைத் தமிழரசுக் கட்சி.

இந்த ஒற்றுமை முயற்சியில் ஈடுபட்டுள்ள தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவைக்கு "புதிய அரசியல் யாப்பு வரைவுக்கான இணக்கப்பாடு" என்ற

07

## கனடாவில் வீடு புகுந்து தாக்குதல் இலங்கை இளைஞன் படுகொலை!

மொன்றியல், ஏப். 20

கனடாவின் டர்ஹாம் பிராந்தியத்திலுள்ள ஏஜாக்ஸ் நகரில், இலங்கை இளைஞன் ஒருவர் அவரது இல்லத்திலேயே வைத்து மர்ம நபர்களால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் சஞ்சுல பெரேரா என அந்நாட்டுப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12:40 மணியளவில், ஏஜாக்ஸ் நகரில் வீடு ஒன்றுக்குள் புகுந்த மர்ம நபர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

07

## ரஷ்யா செல்கிறார் விஜித ஹேரத்!

கொழும்பு, ஏப். 20

இலங்கையின் தற்போதைய எரிபொருள் மற்றும் மின்சார நெருக்கடிக்குத் தீர்வுகாணும் நோக்கில், அரசாங்கம் ரஷ்யாவுடனான இராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்தத் தொடங்கியுள்ளது. இதன் ஒரு முக்கிய கட்டமாக, எரிபொருள் மற்றும் நிலக்கரி கொள்வனவுக்கான ஒப்பந்தங்கள் குறித்துத் தீர்மானிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் எதிர்வரும் மே மாதம் ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

நாட்டில் நிலவும் எரிசக்தி தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்காக ரஷ்யாவுடன் நீண்டகால

07

## அநுரவும் குமார ஜயக்கொடியும் சிறைக்கு சிறை செல்ல நேரிடும்!

### விமல் வீரவன்ஸ எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 20

தரமற்ற நிலக்கரி விவகாரத்தில் ஜனாதிபதி உட்பட குமார ஜயகொடி எதிர்காலத்தில் சிறைசெல்ல நேரிடும். அடுத்த அரசாங்கத்தில் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் வழக்குத் தாக்கல் செய்வோம். இந்த அரசாங்கத்தில் எந்த நிறுவனங்கள் மீதும் எமக்கு நம்பிக்கையில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள்

07

## கீரிமலை கடலில் மூழ்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 20

கீரிமலை கடலில் நீந்தியவேளை தண்ணீரில் மூழ்கி ஆணொருவர் நேற்று பரிதாபமாக உயிரிழந்தார். தெல்லிப்பழை, கட்டுவன் பகுதியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி சந்துரு (வயது 41) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வெளிநாட்டில் இருந்து வந்த ஒரு குழுவினருடன் குறித்த நபர் கீரிமலைக் கேணியில் குளிப்பதற்காக வந்துள்ளார். ஏனையோர் கேணியில் குளித்த வேளை குறித்த நபர் கடலில் இறங்கி

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# நிலக்கரி ஊழலை மூடி மறைக்கும் அரசின் முயற்சியை முறியடிப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு

கொழும்பு, ஏப். 20

நிலக்கரி ஊழலை மூடி மறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் சகல முயற்சிகளையும் தோற்கடிக்க ஒன்றிணைவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார்.

மின்சார உற்பத்தியில் முக்கிய ஆற்றல் மூலமான நிலக்கரி இறக்குமதி செயற்பாட்டில் மிகவும் ஊழல் நிறைந்த கொடுக்கல் வாங்கல் நடந்துள்ளது என்பதை ஐக்கிய மக்கள் சக்தியாக நாம் பல சந்தர்ப்பங்களில் நாட்டிற்கு சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தரமற்ற கீழ்த்தரமான நிலக்கரி கேள்வி கோரல் மூலம் நடந்த இந்த முறைகேடு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியாக நாம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தோம்.

ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

தரமற்ற நிலக்கரி இறக்குமதி மூலம் நடந்த மோசடி தொடர்பாக நாம் முன்வைத்த கருக்களை அலட்சியமாக நிராகரித்த தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், ஆணவத்தனமாக நடந்து கொண்டு தங்களது மோசடியை சமூகத்திடம் இருந்து மறைப்பதற்கு தீவிர முயற்சியில் ஈடுபட்டிருப்பதை எம்மால் காண முடிந்தது.

ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்ட வெளிக்கொணர்வுகளுக்கு மேலதிகமாக, நிலக்கரி நிறுவனத்தின் முன்னாள் தலைவர் இராஜினாமா செய்தபோது வெளியிட்ட அறிக்கை மூலமும், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவில் வெளிப்பட்ட தகவல்கள் மூலமும், இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் அறிக்கையில் தரமற்ற நிலக்கரியைப் பயன்படுத்தி வெப்பமாக்கல் செயற்பாட்டால் ஏற்பட்ட நிதி நட்டம் மூலமும் இந்த ஊழல் நிறைந்த நிலக்கரி கொள்வனவின் உண்மையான நிலை நாட்டுக்கு தெரியவந்தது. இதைத் தொடர்ந்து கணக்காய்வாளர் நாயகம் அறிக்கை மூலம், கேள்வி கோரல் செயல்பாட்டிலிருந்து நிலக்கரி இறக்குமதி வரை மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகளும் அதன் மூலம் நாட்டிற்கு ஏற்பட்ட நிதி நட்டமும் எவ்வளவு என்பதும் வெளிப்பட்டது.

மிக ஊழல் நிறைந்த இந்த தரமற்ற நிலக்கரி கொள்முதல் மூலம் நாட்டுக்கும், மக்களின் வரிப் பணத்திற்கும் ஏற்படுத்திய நட்டத்திற்கு எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும்-என்றார்.

(அ)

# இலங்கையின் சேவைத்துறை மார்ச் மாதத்தில் விரிவடைவு

கொழும்பு, ஏப். 20

கடந்த பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், மார்ச் மாதத்தில் இலங்கையின் சேவைத் துறை நடவடிக்கை விரிவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்திற்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 59.4 ஆகப் பதிவாகியுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில், நிதிச் சேவைத்துறையில் கடன் வழங்கும் நடவடிக்கைகள் கணிசமான அளவு அதிகரித்துள்ளமை, இந்த வளர்ச்சிக்கு காரணமாகும்.

நாடு முழுவதும், பொதுவான வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயற்பாடுகள், மார்ச் மாதத்தில் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டன.

சித்திரை புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகை காலங்களை முன்னிட்டு, சந்தையில் ஏற்பட்ட அதிகளவான கேள்வி காரணமாக மொத்த மற்றும் சில்லறை வியாபார நடவடிக்கைகள் பெரும் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

பண்டிகைக் காலக் கொள்வனவுகள் மற்றும் நிதி ரீதியான வசதிகள் அதிகரித்தமையே, சேவைத்துறையின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணம் என இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (அ)

# பாரிய சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையம் முற்றுகை

கொழும்பு, ஏப். 20

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோவின்ன பாலத்துக்கு அருகிலுள்ள சதுப்பு நிலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சட்டவிரோத மதுபான உற் பத்தி நிலையமொன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க பொலிஸ்நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, நேற்று முன்தினம் இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்தச் சோதனையின் போது 33 லீற்றர் 750 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானம் (45 போத்தல்கள்), மதுபானம் காய்ச்சுவதற்காக வைக்கப்பட்டிருந்த 945 லீற்றர் கோடா (05 பீப்பாய்கள்), 01 எரிவாயு சிலிண்டர் ,01 எரிவாயு அடுப்பு, 01 செப்புச் சுருள் போன்ற பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

மேலும், சம்பவம் தொடர்பில் ஆண்டியம்பலம பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில், சம்பவம் குறித்து கட்டுநாயக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# கரையொதுங்கிய கடல் பசு!

மன்னார், ஏப். 20

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் இறந்த நிலையில் கரை ஒதுங்கிய அரிய வகை கடல் வாழ் உயிரினமான ஆண் கடல் பசுவை கால்நடை மருத்துவர்களின் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் வனத்துறையினர் கடற்கரை மணலில் புதைத்துள்ளனர்.

இறந்த நிலையில் மீட்கப்பட்ட ஆண் கடல் பசு சுமார் 800 கிலோ எடை கொண்டதென கால்நடை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் அரிய வகை கடல் வாழ் உயிரினங்களான கடல் பல்லி, கடல் குதிரை, கடல் பசு, சிப்பி, சங்கு, பவளப்பாறைகள் என சுமார் 1400 இற்கும் அதிகமான அரியவகை கடல் வாழ் உயிரினங்கள் வாழ்ந்து வருவதுடன், இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன், தனுஷ்கோடி, மண்டபம் ஆகிய தெற்கு மன்னார் வளைகுடா கடல் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் வலைகளில் சமீப காலமாக கடல் ஆமை, கடல் பசு, டொல்பின் போன்றன சிக்குவதாகவும், அவை மீனவர்களால் மீண்டும் கடலில் விடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# மீண்டும் கியூ.ஆர். நடைமுறைக்கு!

கொழும்பு, ஏப்.20

பெற்றோல் வாகனங்களுக்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கியூ.ஆர். முறைமை நேற்று முதல் மீண்டும் நடைமுறைக்கு வந்ததாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

சித்திரைப் புத்தாண்டு காலப் பகுதியை முன்னிட்டு, கடந்த ஏப்ரல் 11ஆம் திகதி நள்ளிரவு முதல் நேற்று நள்ளிரவு வரை பெட்ரோல் விநியோகத்திற்கான கியூ.ஆர். முறைமை இடைநிறுத்தப்பட்டி ருந்தது.

நேற்று முதல் அனைத்து வகையான வாகனங்களுக்கும் கியூ.ஆர். முறைமையின் கீழ் எரிபொருள் விநியோகிக்கப்படும் என கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் பணிப்பாளர் மயூராக நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.

அத்துடன், வாகனங்களின் இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் ஒற்றை, இரட்டை முறைப்ப டியே எரிபொருள் வழங்கப்ப டவுள்ளது.

பெட்ரோல் வாகனங்களுக்காக முன்னர் நடைமுறையில் இருந்த அதே எரிபொருள் ஒதுக்கீட்டு அளவு தற்போதும் செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டுக்குத் தேவையான எரிபொருளை விநியோகிக்கும் நோக்கில் 97,500 மெற்றிக் தொன் கச்சா எண்ணெயைத் தாங்கிய கப்பல் ஒன்று அண்மையில் நாட்டை வந்தடைந்துள்ளதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.(அ)

# கடற்பரப்பில் சுற்றிவளைப்பு: 41 சந்தேக நபர்கள் சிக்கினர்!

கொழும்பு, ஏப். 20

நாட்டை சுற்றியுள்ள கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சட்டவிரோத மீன்பிடி மற்றும் பல்வேறு சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட 41 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

நாட்டின் கடல் வளங்களை பாதுகாக்கும் நோக்கில், கடற்படையினர், கடலோர பாதுகாப்புப் படை மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்துடன் இணைந்து ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நாட்டை சுற்றியுள்ள கடல் பகுதிகளில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது சட்டவிரோத நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட 11 டிங்கி படகுகள் மற்றும் 02 வாகனங்கள் என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கிழக்கு, வடக்கு மற்றும் வடமேற்கு கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் செம்மலை, செட்டிப்பாளையம், எலிசபெத் தீவு, பவுல் பொய்ன்ட், கிளாப்பன்பர்க் பொய்ன்ட், உப்புரால், நந்திக் கடல் ஏரி, அளம்பில், திருகோணமலையில் உள்ள புதுவாக்கட்டு, புத்தளத்தில் உள்ள உச்ச முனை மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள கொம்மர் பொய்ன்ட் ஆகிய கடலோரப் பகுதிகள் மற்றும் ஏரிகளை மையப்படுத்தி நடத்தப்பட்டன.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் மூலம் பெருமளவிலான கடலட்டைகள், வணிகத் தரத்திலான வெடிபொருட்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட 41 சந்தேக நபர்களும், கைப்பற்றப்பட்ட டிங்கி படகுகள், வாகனங்கள் மற்றும் உபகரணங்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக முல்லைத்தீவு, கிண்ணியா, ஈச்சிலம்பற்று, களுவாஞ்சிக்குடி, கிளிநொச்சி மற்றும் புத்தளம் ஆகிய இடங்களில் உள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அலுவலகங்களிடமும், புல்மோட்டையில் உள்ள விசேட அதிரடிப்படையினரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# சேமிப்பு முனையங்களை விரிவாக்குகின்றது லிட்ரோ

கொழும்பு, ஏப்.20

நாட்டில் சமையல் எரிவாயு விநியோகத்தை எவ்விதத் தடங்கலுமின்றி சீராக முன்னெடுக்கும் நோக்கில், தனது சேமிப்பு முனையங்களை விரிவாக்கம் செய்ய லிட்ரோ எரிவாயு நிறுவனம் தீர்மானித்துள்ளது. இதற்கான சர்வதேச மட்டத்திலான சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்வதற்குத் தகுதியான நிபுணர்களிடமிருந்து தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்போது இலங்கையின் மொத்த எரிவாயுத் தேவையில் 80 சதவீதத்தை லிட்ரோ நிறுவனம் பூர்த்தி செய்து வருவதுடன், மாதந்தோறும் சுமார் 33,000 மெட்ரிக் தொன் எரிவாயுவை விநியோகித்து வருகின்றது.

அண்மையில் சில பகுதிகளில் நிலவிய தட்டுப்பாட்டு நிலையைச் சீர்செய்ய மேலதிக எரிவாயு கையிருப்புகள் சந்தைக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)




# தேசிய சுற்றாடல் தகவல் மையம் டிஜிற்றல் நூலகமாக மறுசீரமைப்பு

கொழும்பு, ஏப். 20

தேசிய சுற்றாடல் தகவல் மையமானது, பாரம்பரிய நூலக முறையிலிருந்து விலகி நவீன டிஜிற்றல் நூலக கருப் பொருளின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இது இலங்கையின் சுற்றாடல் தகவல்களை தொகுத்து விநியோகிக்கும் பிரதான மையமாக திகழ்கிறது. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கீழ் இயங்கும் இந்த மையம், பயனாளர்களுக்கு சூழல் தொடர்பான அண்மைக்கால ஆய்வுகள், அறிக்கைகள் மற்றும் தகவல்களை எளிதாக பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை வழங்கியுள்ளது.

ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சூழல் தொடர்பான ஆழமான அறிவை வழங்குவதற்கும் இயற்கை, காலநிலை மாற்றங்கள் மற்றும் உலகின் பல்வேறு சுற்றாடல் கோட்பாடுகள் குறித்து கற்க விரும்புவோருக்காகவும் இந்த மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
20.04.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## இவர்களால் வருமா தமிழர்களுக்கு விமோசனம்?

புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்படவேண்டிய சுயாட்சி ஏற்பாட்டுக்கான அடிப்படை அம்சங்களைக் கொண்ட விரிவான வரைவு ஒன்றை வடக்கு, கிழக்கின் சகல தமிழ் கட்சிகளினதும் ஒருங்கிணைந்த பங்கேற்புடன் தயாரிப்பதற்கு தமிழ் சட்டத்தரணிகள் பேரவை ஒரு முயற்சியை மேற்கொண்டு வருகிறது. பேரவை தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இதுவரையில் இரு கூட்டங்களை நடத்தியிருக்கிறது.

இனப்பிரச்னை மற்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படக்கூடிய எந்தவொரு கலந்துரையாடலிலும் தனியாகவும் கட்சி அடிப்படையிலும் இனிமேல் தமிழ் கட்சிகள் செயற்படுவதில்லை என்ற இணக்கப்பாடு முதலாவது கூட்டத்தில் காணப்பட்டதாக பேரவையின் கூறப்பட்டது.

இனிமேல் அரசியல் தீர்வு மற்றும் அரசியலமைப்பு வரைவு விடயங்களில் தமிழ் கட்சிகள் ஒருங்கிணைந்த அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதற்கு வழிவகுக்கக்கூடிய ஒரு ஆரோக்கியமான முயற்சியை தமிழ் சட்டத்தரணிகள் பேரவை முன்னெடுக்கிறது என்று தமிழர்கள் மத்தியில் ஒரு வகையான ஆறுதலும் ஏற்பட்டது. அதேவேளை, தனியாகச் செயற்படுவதில்லை என்ற இணக்கப்பாட்டில் இருந்து எந்தவொரு தமிழ்க் கட்சியும் விலகாமல் இருப்பதை உறுதி செய்யக்கூடிய வல்லமை பேரவைக்கு இருக்கிறதா என்ற கேள்வியை ஈழநாடு எழுப்பியது.

அந்த கேள்வி முற்றிலும் நியாயமானது என்பதை "ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச்சபை" என்ற ஒரு அமைப்பின் சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி தி.விக்னேஸ்வரன் என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை நிரூபித்திருக்கிறது.

இந்த ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச்சபையினால் நியமிக்கப்படும் ஒரு குழு மூன்று மாதங்களுக்குள் இறுதி அரசியல் தீர்வுத்திட்ட வரைவை முன்வைக்கும் என்று தெரிவித்திருக்கும் அந்த அறிக்கையில் கைச்சாத்திட்ட ஏழு பேரில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச்செயலாளர் கஜேந்திரகுமாரின் பெயர் இரண்டாவதாக இருக்கிறது. தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் கூட்டத்தில் "தனியாகச் செயற்படுவதில்லை" என்று காணப்பட்ட இணக்கப்பாட்டை தமிழ் காங்கிரஸ் "தகர்த்துவிட்டது" என்று இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானமும் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும் பேரவைக்கு கடிதம் ஒன்றை சனிக்கிழமை எழுதியிருக்கிறார்கள்.

ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய சபை என்ற பெயரில் தனியான முயற்சியை முன்னெடுக்காமல் சட்டத்தரணிகள் பேரவையின் முயற்சிகளுக்கு சகலரும் ஒத்துழைக்கவேண்டும் என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்.

இணக்கப்பாட்டை தமிழ் காங்கிரஸ் தகர்த்து விட்டதாக தமிழரசு கட்சி முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டுக்கு பொன்னம்பலத்திடமிருந்தோ அல்லது அந்த கட்சியின் சார்பில் குரல்தரவல்ல எவரிடமிருந்துமோ இதுவரையில் பதில் வரவில்லை. அவர்களிடமிருந்து வரக்கூடிய பதில் என்னவாக இருந்தாலும் தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வை காணும் விடயத்தில் தமிழ்க் கட்சிகளிடம் ஒன்றிணைந்த நிலைப்பாட்டை எதிர்பார்ப்பது "உண்மையில் பைத்தியக்காரத்தனம்" என்பது மாத்திரம் நிரூபிக்கப்பட்ட வண்ணமேயிருக்கிறது.

இன்றைய இலங்கைத் தமிழர் அரசியலில் குறிப்பாக வடக்கில் சிவஞானம் – சுமந்திரன் தலைமையிலான தமிழரசு கட்சி, பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் என்ற இரணடு முகாம்கள் இருக்கின்றன. மற்றைய தமிழ் கட்சிகள் அவ்வப்போது ஏதோ ஒரு முகாமுடன் சேர்ந்து நிற்கும். அரசியல் நிர்ப்பந்தங்கள் மற்றும் தேவைகளைப் பொறுத்து அவை முகாமை மாற்றிக் கொள்ளவும் செய்யும்.

இரு முகாம்களுமே ஒன்றின் நிலைப்பாட்டுக்கு மற்றையது எதிர்வினையைக் காட்டுவதிலேயே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றன. எதிர்வினையைக் காட்டுவதை விடுத்து தங்களது நிலைப்பாட்டை தமிழ் மக்கள் மத்தியில் கொண்டு சென்று பரந்த ஏற்புடைமையைப் பெறக்கூடிய அரசியல் துணிவாற்றலும் எந்தவொரு முகாமிடமும் இல்லை.

அரசியலமைப்பு நிர்ணய பொதுச்சபையின் அறிக்கை இந்த "எதிர்வினைக் கலாசாரத்தின்" தவிர்க்க முடியாத வெளிப்பாடேயாகும். இவர்களால் வருமா தமிழர்களுக்கு விமோசனம்?

# முழு நேர அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றார் பொலிஸ்மா அதிபர்

### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 20

தற்போதைய பொலிஸ்மா அதிபர், மக்கள் விடுதலை முன்னணியின் பெலவத்தை காரியாலயத்தில் பொலிஸ்மா அதிபராகவே செயல்படுகின்றார். முழு நேர அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார். எமக்கு எதிராக போலிச் சாட்சிகளை திரட்டுகின்றார். நீதித்துறை மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. சகல சூழ்ச்சிகளையும் நீதித்துறை ஊடாக வெற்றி கொள்வோம் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுமக்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்தில் பொலிஸ் திணைக்களம் முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டார்.

எமக்கு எதிராக சகல அரசியல் சூழ்ச்சிகளையும் நீதித்துறை ஊடாக வெற்றிக் கொள்வோம். நான் அரசியலுக்கு வந்து 16 ஆண்டுகள் ஆகின்றன. ராஜபக்ஷக்கள் அரச நிதியை மோசடி செய்தார்கள் என்று தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால், இதுவரையில் அந்த குற்றச்சாட்டுக்கள் ஏதும் நிரூபிக்கப்படவில்லை. மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் கடந்த காலங்களில் தாம் ஏழ்மையான வாழ்க்கை வாழ்வதாக குறிப்பிட்டார்கள். ஆனால், தற்போது பாரம்பரிய அரசியல்வாதிகளை காட்டிலும் செல்வந்தர்களாக உள்ளார்கள்.

ராஜபக்ஷக்கள் செல்வந்தர்கள் என்று குற்றஞ்சாட்டிய அமைச்சர் பிமல் ரத்நாயக்க இன்று எம்மை விட செல்வந்தராக உள்ளார். எம்மை விமர்சித்தே இவர்கள் அரசியலில் இன்றும் நிலைத்து நிற்கிறார்கள். இனியாவது நாட்டு மக்கள் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும்" - என்றார். (எ)

# நேட்டோ நாடுகளின் உதவி எங்களுக்கு தேவையில்லை

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

வாஷிங்டன், ஏப். 20

நேட்டோ நாடுகளின் உதவி எங்களுக்கு தேவையில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். நேட்டோ நாடுகளின் உதவி குறித்து அவர் கடுமையான கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார்.

ஈரான் - அமெரிக்கா இடையே தற்காலிக போர் நிறுத்தம் அமுலில் உள்ள நிலையில், முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்துள்ளன. விரைவில் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன என்றும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், ஹோர்மூஸ் நீரிணையை ஈரான் திறக்காமல் வைத்திருந்த நிலையில், லெபனான் - இஸ்ரேல் இடையிலான போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, அந்த கடல் வழியாக அனைத்து நாடுகளின் வர்த்தக கப்பல்களும் பயணிக்க அனுமதி வழங்கப்படுவதாக அறிவித்துள்ளது.

இந்தச் சூழலில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஹோர்மூஸ் நீரிணை பிரச்னை ஏறக்குறைய முடிவடைந்துள்ளது. இந்த நிலையில், எங்களுக்கு உதவி தேவைப்படுகிறதா? என்று நேட்டோ தரப்பிலிருந்து அழைப்பு வந்தது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு உங்கள் உதவி தேவைப்பட்டிருக்கலாம். ஆனால், தற்போது உங்கள் உதவி எங்களுக்கு தேவையில்லை என்று தெரிவித்தேன். எங்களுக்கு உதவி தேவைப்பட்ட நேரத்தில் அவர்கள் பயனற்றவர்களாக இருந்தனர் - என்றார்.

மேலும், உண்மையில் அமெரிக்காவுக்கு நேட்டோ தேவையில்லை. நேட்டோவுக்குத்தான் அமெரிக்கா தேவைப்படுகிறது எனவும் ட்ரம்ப் தெரிவித்தார். (எ)

# லால் காந்தவின் சொத்து விவரங்கள்: தவறான தகவலை திருத்திய ஊடகம்

கொழும்பு, ஏப். 20

அமைச்சர் கே. டி. லால் காந்தவின் சொத்து மற்றும் கடன் விவரங்கள் தொடர்பில் அண்மையில் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்ட புள்ளிவிவரங்கள் தவறானவை என தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, அமைச்சரின் சட்டத்தரணிகள் மேற்கொண்ட நடவடிக்கையை தொடர்ந்து, குறித்த ஊடக நிறுவனம் தனது தவறை ஒப்புக்கொண்டு திருத்தம் வெளியிட்டுள்ளது.

கடந்த 16ஆம் திகதி, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் அமைச்சர் சமர்ப்பித்த சொத்து விவரங்களை மேற்கோள் காட்டி குறித்த நிறுவனம் செய்தி வெளியிட்டிருந்தது. இதன்போது, அமைச்சரின் சொத்து மதிப்பு மற்றும் அவரிடமுள்ள பிணையங்கள் குறித்து மிகைப்படுத்தப்பட்ட மற்றும் தவறான புள்ளிவிவரங்கள் ஒளிபரப்பப்பட்டன.

தனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் தவறான தரவுகள் வெளியிடப்பட்டதை கண்டித்த அமைச்சர் லால் காந்த, தனது சட்டத்தரணி ஊடாக குறித்த ஊடக நிறுவனத்துக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பிள்ளார்.

தவறான கணக்கீடுகளை உடனடியாக திருத்தி, உண்மையான விவரங்களை வெளியிடுமாறு அதில் வலியுறுத்தப்பட்டது.

சட்ட ரீதியான அழுத்தத்தையடுத்து, ஊடகங்களுக்குரிய "திருத்தம் செய்யும் உரிமையின்" கீழ் குறித்த நிறுவனம் புதிய விளக்கத்தை அளித்துள்ளது.

அதில் கூறப்பட்டுள்ள முக்கிய திருத்தங்கள் பின்வருமாறு:

முன்னதாக 38 கோடி ரூபாய்க்கும் அதிகம் எனத் தவறாக கணக்கிடப்பட்ட அமைச்சரின் பத்திரங்களின் உண்மையான பெறுமதி 1,43,475.08 ரூபாய் மட்டுமே எனத் திருத்தப்பட்டுள்ளது.

அமைச்சரின் மொத்த சொத்து மதிப்பு 46 கோடி ரூபாய் என அந்த நிறுவனம் முன்பு செய்தியில் குறிப்பிட்டிருந்தது. ஆனால், முறையான கணக்கீட்டின்படி அவரது மொத்த சொத்துக்களின் தோராயமான மதிப்பு 8 கோடி ரூபாய் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 20 திங்கக்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 07
நல்ல நேரம் : 06.00 - 7.30
ராகு காலம் : 07.30 - 9.00
திதி : சதுர்த்தி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்ல கூடிய கருத்துக்கள் கூட சீரியசாக வாய்ப்பிருக்கிறது.

**இடபம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். திடீர் பயணங்கள் செலவுகளால் திணறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். சிறப்பான நாள்.

**கடகம்**
உணர்ச்சி வசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள். செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலைத்தூக்கும். உறவினர் முன்கோபத்தால் பகை உண்டாகும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**துலாம்**
மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. விலைஉயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழியில் உறவினர்கள் மதிப்பார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக்கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அமோகமான நாள்.

**தனுசு**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். வேற்றுமதத்தவர்கள் நண்பர்கள் ஆவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கும்பம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொத்துப் பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

# உழவியந்திரம் கவிழ்ந்ததில் இளம் குடும்பஸ்தர் மரணம்

வவுனியா, ஏப். 20

உழவியந்திரம் கவிழ்ந்ததில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா வடக்கு மதியாமடு பகுதியில் இந்த துயரச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த நபர் தேவை நிமித்தம் உழவியந்திரத்தை செலுத்திச் சென்றார்.

இதன்போது, கட்டுப்பாட்டை இழந்த உழவியந்திரம் திடீரென தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் அதனை செலுத்திச்சென்ற சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

29 வயது இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-10)



# பருத்தித்துறையில் அன்னை பூபதிக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 20

அன்னை பூபதியின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

பருத்தித்துறை பண்ணையம்பதி பகுதியில் நேற்றுக் காலை 10: 30 மணியளவில் ஜனநாயக போராளிகள் கட்சியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஜெய கோபி அலுவலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் அன்னை பூபதியின் திருவுருவ படத்துக்கு ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் சி. வேந்தன், ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், ஜனநாயக போராளிகள் கட்சியின் இளைஞர் அணியினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-08)





# இளைய சமுதாயத்தை நல்வழிப்படுத்த சமயத் தலைவர்கள் முன்வர வேண்டும்

## கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 20

இளைய சமுதாயத்தை நல்வழிப்படுத்துவதற்கு சமயத் தலைவர்கள், பாடசாலை சமூகங்கள் விழிப்படைய வேண்டும் என்று செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் இளைய சமுதாயம் தவறான பாதைக்கு செல்வது தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் உள்ள ஆன்மீக தலைவர்கள், பாடசாலை சமூகங்கள் விழிப்படைய வேண்டும். குறிப்பாக போதைவஸ்துக்கு அடிமையாகும் இளைய சமுதாயத்தை கட்டுப்படுத்துவதற்கு சகல சமயத் தலைவர்களும் சகல பாடசாலை சமூகத்தலைவர்களும் விழிப்படைய வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கில் என்றும் இல்லாதவாறு இளைய தலைமுறை குறிப்பாக பாடசாலை மாணவர்கள் தொடக்கம் போதைவஸ்துக்கு அடிமையாகும் தன்மை அதிகரித்து வருகின்றது. சமீபகாலத்தில் நடைபெற்ற சமூகப் பிறழ்வுகள் சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்கள் பலரும் போதைவஸ்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்பதை பொலிஸார் தெரியப்படுத்தியுள்ளனர். இது மிகவும் அபாயகரமானது.- என்றார்.

# மன்னாரில் ஒன்றரை வயது குழந்தை விபத்தில் மரணம்

மன்னார், ஏப். 20

மன்னார், தாழ்வுப்பாடு தாராபுரம் வீதியின் துர்க்கி சிட்டி கிராமத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒன்றரை வயது குழந்தை ஒன்று உயிரிழந்தது.

நேற்று முன்தினம் காலை பேக்கரி உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற ஓட்டோ ஒன்று மோதியதிலேயே இந்த விபத்து நேர்ந்தது.

விபத்தில் காயமடைந்த குழந்தை மன்னார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, அக்மீமன, காலி - உடுகம வீதியின் படதுவ பகுதியில் காலி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை கடந்த பெண் பாதசாரி மீது மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்த பாதசாரி பெண்ணும் மோட்டார் சைக்கிள் சாரதியும் கராப்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், பெண் உயிரிழந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வீட்டுக்கு தீ வைப்பு தாயும் மகளும் பலி!

## மேலும் இருவர் படுகாயம்

கொழும்பு, ஏப். 20

மஹரகமையில் உள்ள வீடொன்றின் மேல் மாடிக்கு இனந்தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டதில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகளும் உயிரிழந்தனர். மேலும், இருவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.

மஹரகம, பமுணுவ வீதி, எக்சத் சுபசாதக மாவத்தை, இரண்டாவது குறுக்கு ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் வாடகை அடிப்படையில் வசித்து வந்த 55 வயதுடைய பெண் மற்றும் அவரது 16 வயது மகளுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

இந்தக் கொடூரச் சம்பவத்தில் பலத்த தீக்காயங்களுக்குள்ளான சிறுமியின் தந்தை மற்றும் வீட்டின் உரிமையாளரான 76 வயதுடைய முதியவர் ஆகியோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றதுடன், அயலவர்கள் உடனடியாக செயல்பட்டு தீயை அணைத்து, காயமடைந்த இருவரையும் மருத்துவமனையில் அனுமதித்தனர்.

பின்னர் வீட்டை சோதனையிட்ட போது, அறையொன்றுக்குள் தாயும் மகளும் சடலமாக மீட்கப்பட்டனர்.

குற்றச்செயல் நடந்த இடத்தில் பெற்றோல் வாடை வீசியதோடு, வீடொன்றுக்குத் தீ வைத்து மேற்கொள்ளப்பட்ட இரட்டைக் கொலைச் சம்பவம் இதுவென விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், மஹரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## மிதிகம பகுதியில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஏப். 20

மிதிகம பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மிதிகம யஹமவத்த, கங்கோட பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றை குறிவைத்து இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. எனினும், வீட்டின் சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டன.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றுக்கு தீ வைத்து, பின்னர் சுமார் ஐந்து முறை துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

மிதிகம "லான்சி" என அழைக்கப்படும் பாதாள உலகக் கும்பலுடன் தொடர்புடையவர்களின் செயலாக இது இருக்கக்கூடும் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மேலும், உடற்பயிற்சி நிலையத்தில் குறித்த வீட்டின் உரிமையாளரான 35 வயது வர்த்தகருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் வர்த்தகர், அவரது மனைவி, இரண்டு பிள்ளைகள் மற்றும் வயோதிபர் ஒருவர் வீட்டில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## புத்தாண்டு விழாவில் மோதல்: ஏழு பேர் மருத்துவமனையில்

புத்தளம், ஏப். 20

ஆனமடுவ, கரம்பேவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சித்திரை புத்தாண்டு விழாவின் போது ஏற்பட்ட மோதலில் ஏழு பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் ஆனமடுவ ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிராம மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த புத்தாண்டு விழாவுக்கு வருகை தந்திருந்த இரு தரப்பினரிடையேயான பழைய பகை காரணமாக இந்த அமைதியற்ற நிலை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அது கைகலப்பாக மாறியுள்ளமை பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த மோதலில் புத்தாண்டு விழாவில் கலந்துகொண்ட சுமார் 20 பேர் வரை ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும், சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல்கள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனமடுவ பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

## நீரில் மூழ்கிய நபரை மீட்ட உயிர்காப்புப் பிரிவினர்!

அநுராதபுரம், ஏப். 20

அநுராதபுரம் - திஸாவெவயில் நீராடிக்கொண்டிருந்த போது நீரில் மூழ்கிய இளைஞன் ஒருவரை, அநுராதபுரம் பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் மீட்டனர்.

சனிக்கிழமை மதியம் இந்தச் சம்பவம் பதிவானது.

மீட்கப்பட்ட இளைஞருக்கு முதலுதவிகள் வழங்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்டவர் பண்டாரவளை பகுதியைச் சேர்ந்த 27 வயது இளைஞன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (எ)

## வேட்டைத் துப்பாக்கி வெடித்து ஒருவர் பலி!

புத்தளம், ஏப். 20

ஆனமடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரமாகந்த, லணுவாவ குளத்துக்கு அருகிலுள்ள காட்டுப்பகுதியில் வேட்டைத் துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பரமாகந்தகம, ஆனமடுவ பகுதியை சேர்ந்த 39 வயதுடைய குடும்பஸ்தர் ஆவார்.

இச்சம்பவம் தொடர்பில் குறித்த வேட்டைத் துப்பாக்கியை வைத்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு ஆனமடுவ நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

நீதிமன்ற உத்தரவின்படி, சந்தேகநபர் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (எ)

## நீர்த்தேக்கத்தில் மூழ்கி 2 இளைஞர்கள் மரணம்!

அநுராதபுரம், ஏப். 20

தம்புத்தேகம பகுதியில் நல்லச்சிய நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

தம்புத்தேகம, நல்லச்சிய நீர்த்தேக்கத்தின் இடது கரை வழியாக நீர் பாயும் கால்வாயில் சனிக்கிழமை பிற்பகல் இரண்டு சடலங்கள் காணப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அவை மீட்கப்பட்டன.

உயிரிழந்தவர்கள் 19 மற்றும் 30 வயதுடைய இளைஞர்கள் என தெரியவந்துள்ளது.

இவர்கள் பெந்திவெவ மற்றும் திம்பிரிகஸ்கடவல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டனர்.

இந்த இருவரும் நீராடச் சென்ற போதே நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாக நாம் தயார்!

## பொதுஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஏப். 20

தரமற்ற நிலக்கரி கொள்வனவால் ஏற்பட்ட பல மில்லியன் ரூபாய்க் நஷ்டத்துக்கு பொறுப்புக்கூறுவது யார்?. நிலக்கரி தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகி விடயங்களை முன்வைப்பதற்கு தயாராகவுள்ளோம் என்று சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டி. வி. சானக தெரிவித்தார்.


2009 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள பூரண அதிகாரமிக்க ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு குறித்து வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது, "ஊழலை இல்லாதொழிப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் ஊழலை முன்னிலைப்படுத்தி செயல்படுகிறது. அமைச்சர்கள் தவறுகளை தெரிந்து செய்கிறார்களா? அல்லது தெரியாமல் செய்கிறார்களா? என்பது தெரியவில்லை.

ஏதேனும் குறைகளை எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியவுடன் இரகசியமாக குறைகளை திருத்திக் கொள்கிறார்கள். பின்னர் எதிர்க்கட்சியினரை விமர்சிக்கிறார்கள்.

நிலக்கரி கொள்வனவில் பாரியதொரு மோசடி இடம்பெற்றுள்ளது. புதிய நிறுவனத்துக்கு விலைமனுகோரல் வழங்கப்பட்டுள்ளது. தரமற்ற நிலக்கரியால் பாரிய விளைவுகள் ஏற்படும். அவசர தேவைக்கான முறையான காரணிகள் ஏதும் இல்லாத வகையில் தரமற்ற வகையில் நிலக்கரி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். முழு அமைச்சரவையும் எதிர்காலத்தில் சிறைச் செல்ல நேரிடும்."- என்றார். (எ)

# நாட்டிலிருந்து புறப்பட்டது இந்தோனேஷிய கப்பல்!



கொழும்பு, ஏப். 20

இலங்கைக்கு நல்லெண்ண பயணம் மேற்கொண்ட இந்தோனேஷிய கடற்படையின் **'KRI BIMA SUCI - 945"** பாய்மரக் கப்பல், தனது பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து சனிக்கிழமை கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்றது.

கொழும்பு துறைமுகத்தில் இலங்கை கடற்படையினரால் கடற்படை மரபுகளுக்கு அமைய கப்பலுக்கு பிரியாவிடை அளிக்கப்பட்டது.

கப்பலின் கட்டளை அதிகாரி சுகெங் ஹரியான்டோ, மேற்கு கடற்படை கட்டளை தளபதி மற்றும் செயல்பாடுகளின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயர்மட்ட கடற்படை அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

2027ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இலங்கை - இந்தோனேஷிய கடற்படைகளுக்கு இடையிலான பணியாளர் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் குறித்த பூர்வாங்க கலந்துரையாடல் கொழும்பு கடற்படை தளத்தில் நடைபெற்றது.(எ)

# வவுனியாவில் அன்னை பூபதியின் 38ஆவது ஆண்டு நினைவு தினம்



வவுனியா, ஏப். 20

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினால் அன்னை பூபதியின் 38ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த அஞ்சலி நிகழ்வு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் வவுனியா ஏ-9 வீதியில் 3356 வது நாளாக சுழற்சி முறை போராட்டத்தில் ஈடுபடும் பந்தலில் நடைபெற்றது.

இதன்போது, அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கு விளக்கேற்றி, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (எ)

## வனப்பகுதியில் சிதைந்த நிலையில் சடலம் மீட்பு!

கிளிநொச்சி, ஏப். 20

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காஞ்சிபுரம் வனப்பகுதியில் இனந்தெரியாத நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

சனிக்கிழமை இரவு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை யடுத்து குறித்த சடலம் மீட்கப்பட்டது.

இந்த சடலம் அடையாளம் காண முடியாத நிலையில் காணப்பட்டது. கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# அமைச்சர் லால் காந்தவுக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடளிக்கத் தயார்

## தேசிய விவசாய ஒற்றுமை அமைப்பு

கொழும்பு, ஏப். 20

அமைச்சர் லால் காந்த, தனது அதிகாரத்தை பயன்படுத்தி சேர்த்த 60 கோடி ரூபாய் ஊழல் விவகாரம் குறித்து முழுமையான தகவல்கள் என்னிடம் உள்ளன. இந்த விவகாரம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்குச் சென்று உண்மைகளை வெளிப்படுத்தத் நான் தயார் என்று தேசிய விவசாய ஒற்றுமை அமைப்பின் தலைவர் அனுராத தென்னக்கோன் அறிவித்துள்ளார்.

தேசிய விவசாய ஒற்றுமை அமைப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் லால் காந்தவின் 60 கோடி ரூபாய் ஊழல் விவகாரம் குறித்து முழுமையான தகவல்கள் என்னிடம் உள்ளன. தேவைப்படின் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்குச் சென்று இது குறித்து வாக்குமூலம் வழங்க நான் எந்தவித அச்சமுமின்றித் தயாராக இருக்கின்றேன்.

சமீபத்தில், மிக அதிக வணிக பெறுமதியுள்ள காணி ஒன்றின் உறுதிப் பத்திரங்களைச் சட்டரீதியாகத் தயார் செய்வதாகக் கூறி, சில அரச அதிகாரிகளின் ஒருங்கிணைப்புடனும், ஒரு குறிப்பிட்ட தேரரின் தலையீட்டுடனும் அமைச்சர் லால் காந்த கையாடிய இலஞ்சப் பணம் மாத்திரம் 60 கோடி ரூபாயாகும்.

இது எமக்குக் கிடைத்த ஆரம்பகட்டத் தகவலாகும். இந்த ஊழல் தொடர்பான அனைத்து ஆதாரங்களையும் குறித்த தேரர் வெளியிடுவதற்குத் தயாராகி வருகின்றார். அமைச்சருக்குச் சென்ற தொகை இதைவிட அதிகமாக இருக்கலாம் என்பதே எமது சந்தேகம். விவசாயத் துறையை மேம்படுத்துவதற்காகவும், ஊழல்வாதிகளை வேட்டையாடுவதற்காகவும் ஆட்சிக்கு வந்ததாகக் கூறும் அரசாங்கம், தற்போது ஊழல்வாதிகளின் கூடாரமாக மாறியுள்ளது.- என்றார். (எ)

# ஆணைக்குழுவில் எதிரணியின் எத்தனை பேர் முன்னிலையாவர்

## எதிர்பார்ப்புடன் இருப்பதாக மகிந்த ஜயசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 20

நிலக்கரி கொள்வனவு தொடர்பில் கடந்த காலங்களில் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்த எதிர்க்கட்சியின் எத்தனை உறுப்பினர்கள் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுவார்கள் என்பதை பார்த்து கொண்டிருக்கிறோம்.

பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்து கொண்டு போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பதை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது,

ராஜபக்ஷக்கள் மற்றும் ரணில் அணியின் ஊழல் மோசடிகள் வெளிவரும் போது அரசாங்கத்தின் மீது ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்க எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர்.

தரமற்ற நிலக்கரி இறக்குமதியின் போது ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு மற்றும் அதனால் ஏற்பட்ட நட்டத்தை குறித்த நிறுவனத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும் எதிர்க்கட்சியினர் தொடர்ந்து அதே குற்றச்சாட்டையே முன்வைக்கிறார்கள்.

நிலக்கரி இறக்குமதியின் போது வலுசக்தி அமைச்சர் எவ்வாறு விலைமனுகோரலில் தலையீடு செய்தார், அது ஊழல் மோசடிக்கு எவ்வகையில் காரணியாக அமைந்தது என்பது பற்றி எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் எவரும் குறிப்பிடவில்லை.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தின் போது இந்த விடயத்தை எதிர்க்கட்சியினர் தெளிவுபடுத்தவில்லை.

நிலக்கரி கொள்வனவு தொடர்பில் கடந்த காலங்களில் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்த எதிர்க்கட்சியின் எத்தனை உறுப்பினர்கள் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுவார்கள் என்பதை பார்த்துக் கொண்டிருக்கிறோம். - என்றார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இலங்கைத் தமிழ்...

வழங்கியுள்ளதாகவும், அடுத்த கட்டமாக நான்காம் கட்ட வீடமைப்பு திட்டத்தின் கீழ் மேலும் 10,000 வீடுகள் வழங்கப்பட உள்ளதாகவும் அவர் அறிவித்தார்.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கிடையே உறவை வலுப்படுத்தும் உயிர்ப்புள்ள பாலமாக உள்ளனர் என அவர் சுட்டிக்காட்டினார். இந்திய அரசும் மக்களும் இலங்கையில் வாழும் தமிழ் மக்களை எப்போதும் தங்கள் இதயத்தில் வைத்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு” என்ற திருக்குறளை மேற்கோள் காட்டிய அவர், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான இந்திய அரசு, ‘சாகர் பந்து’ நடவடிக்கையின் மூலம் பேரிடர் காலங்களில் உடனடி உதவிகளை வழங்கி வந்ததை நினைவூட்டினார்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு இந்திய அரசு என்றும் உறுதுணையாக இருக்கும் என்றும், இருநாடுகளுக்கிடையேயான நட்பு மற்றும் ஒத்துழைப்பு தொடர்ந்தும் வலுப்பெறும் என்றும் அவர் உறுதியளித்தார். (அ)

## இந்திய துணை...

பிரதிநிதிகளை நேற்று சந்தித்து கலந் துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பில் இலங்கை தமிழ ரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் தேசிய மக் கள் முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

அதேநேரம் மலையக தமிழ்க் கட்சிகளின் சார்பில் தமிழ் முற்போ க்கு கூட்டணி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட் சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

தற்போதைய அரசியல் சூழல் மற்றும் அரசியல் தீர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இத ன்போது கலந்துரையாடப்பட்டுள் ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் டித்வா புயலுக்கு பிந்தைய மறுவாழ்வு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக இந்திய அரசாங்கம் வழங்கிய 450 மில்லி யன் அமெரிக்க டொலர் பெறுமதி யான உதவிப் பொதிக்கும், காலப்போக்கில் வழங்கப் பட்ட ஏனைய நிவாரண நடவடிக்கைகளுக்கும் இந்திய அரசாங்கத்திற்குத் தமிழ்க் கட்சிகளின் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## ஜனாதிபதி...

இருதரப்பு கலந்துரையாடல் நேற்று காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்த இந்திய துணை ஜனாதிபதிக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சிறப்பு வரவேற்பளித்ததுடன், அவரது புதிய பதவிக்கு வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

இலங்கைக்கு மேற்கொள்ளும் தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் எனக் குறிப்பிட்ட இந்திய துணை ஜனாதிபதி, வழங்கப்பட்ட உன்னத வரவேற்பு மற்றும் விருந்தோம்பலுக்கு நன்றி தெரிவித்தார்.

இரு தலைவர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தையில் இந்தியா - இலங்கை இடையிலான நீண்ட கால நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், சுற்றுலா, முதலீடு மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து இருதரப்பும் இணக்கம் தெரிவித்தன.

குறிப்பாக வலுசக்தி பாதுகாப்பு மற்றும் துறைமுக அபிவிருத்தி துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த எதிர்பார்ப்பு வெளிப்படுத்தப்பட்டது.

இந்திய அரசின் ஆதரவுடன் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் வீட்டுத்திட்டங்கள் மற்றும் டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக வழங்கப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி தொகையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்தியாவுடன் மேற்கொண்ட அண்மைய உத்தியோகபூர்வ விஜயங்களின் போது எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கு ஏற்ப, இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார மற்றும் சமூக ஒத்துழைப்பு தற்போது பல்வேறு துறைகளில் விரிவடைந்து வருவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இதன் மூலம் எதிர்காலத்தில் இருதரப்பு உறவுகள் மேலும் வலுப்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

டித்வா சூறாவளி காலத்தில் இந்தியா வழங்கிய அவசர உதவிகளுக்கும், இந்திய வரவுசெலவுத் திட்டத்தில் இலங்கைக்காக நிதி ஒதுக்கீடு செய்ததற்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

அதேபோல், மத்திய கிழக்கு போர்ச்சூழல் காரணமாக ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடியின் போது 38,000 மெற்றிக் தொன் எரிபொருள் வழங்கியதையும் அவர் நினைவு கூர்ந்தார்.

தொழில்நுட்பத் துறையில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றங்களை பாராட்டிய ஜனாதிபதி, மனிதவள மேம்பாடு மற்றும் அரச துறையின் டிஜிட்டல் மாற்றத்தில் இந்தியாவின் ஒத்துழைப்பை இலங்கை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மீனவர் பிரச்னைகள் குறித்தும் இங்கு விசேடமாக கலந்துரையாடப்பட்டதுடன், நீண்ட கால மற்றும் நிலையான தீர்வை கண்டறிய இருதரப்பும் இணைந்து செயல்பட வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டது.

இந்திய தூதுக்குழுவில் இந்திய அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டதுடன், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகள் பலரும் இக்கலந்துரையாடலில் பங்கேற்றனர். (அ)

## ரஷ்யாவிடமிருந்து...

இதற்கிடையில், மத்திய கிழக்கில் போர் பதற்றம் ஆரம்பமான பிறகு, இலங்கைக்கு மசகு எண்ணெயை ஏற்றி வந்த முதலாவது கப்பலான ‘தேஷ்’ நேற்று முன் தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்திய கப்பல் கழகத்திற்குச் சொந்தமான இந்தக் கப்பல், ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து 97,500 மெட்ரிக் தொன் மசகு எண்ணெயை எடுத்து வந்துள்ளது.

இந்த எரிபொருள் கையிருப்பு சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படவுள்ள நிலையில், அமெரிக்காவிலிருந்து மற்றுமொரு எரிபொருள் கப்பலும் இலங்கையை நோக்கிப் பயணத்தைத் தொடங்கியுள்ளது. (அ)

## கனடாவில்...

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், வீட்டிற்குள் இளைஞர் ஒருவர் மிகக் கடுமையான காயங்களுடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்ததைக் கண்டனர். அவருக்குத் தீவிர மருத்துவச் சிகிச்சைகள் அளிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த பொலிஸ் அதிகாரி நிக்கோலஸ் கிளக்ஸ்டைன், “இது ஒரு தற்செயலான நிகழ்வு அல்ல் குறிப்பிட்ட அந்த நபரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட ஒரு திட்டமிட்ட தாக்குதல்” எனத் தெரிவித்தார்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் எது என்பது குறித்த விவரங்களை பொலிஸார் இதுவரை பாதுகாப்பு காரணங்களுக்காக வெளியிடவில்லை.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்னதாகவே, அங்கிருந்து இருவர் தப்பியோடியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. அவர்களது அடையாளங்கள் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## ஒற்றுமைக்கான...

தலைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானமும், பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும் ஒப்பமிட்டு எழுதியுள்ள கடிதத்தில் இந்த விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தின் முழு விவரம் வருமாறு:-

“புதிய அரசியல் யாப்பு வரைவுக்கான இணக்கப்பாடு” - மேற்சொன்ன தலைப்பில் தங்களது கடந்த 2026.03.02 திகதியிட்ட கடிதமும் 02.03.2026 அன்றும் 09.04.2026 அன்றும் நடைபெற்ற கூட்டங்கள் சம்பந்தமாகவும் அக்கூட்டத்தில் எய்தப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பாகவும் பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்டி இக்கடிதத்தை மிகவும் மனவருத்தத்துடன் எழுதுகின்றோம்.

தங்களின் மேற்படி முயற்சியை நாம் எதுவித தயக்கமும் இன்றி உடனடியாகவே வரவேற்றமை மட்டுமல்லாமல் எமது கட்சியின் சார்பில் முழுமையான ஒத்துழைப்பையும் நல்கினோம் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இந்த ஒத்துழைப்புக் காரணமாக ஒரு பொது இணக்கப்பாடு எட்டப்படும் வரை இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்து அரசாங்கத்தோடு அரசியல் தீர்வு சம்பந்தமாக எதுவிதமான இடைவினையும் கொள்ள மாட்டாது என்ற வாக்குறுதியையும் நாம் வழங்கியிருந்தோம். வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான (ஒரே) கட்சியாக நாம் இருந்தபோதும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் கோரிக்கையை ஏற்று இந்த வாக்குறுதியை நாம் வழங்கியிருந்தோம்.

ஆனால் நேற்று தமிழ்த் தேசிய பேரவை என்ற பெயரில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கை, மேற்சொன்ன இணக்கப்பாட்டை முற்று முழுதாக மீறுகின்றதாக இருப்பதை தாங்களும் அவதானித்திருப்பீர்கள் என்று திடமாக நம்புகின்றோம்.

தாங்கள் நியமித்த நிபுணர் குழுவின் அமர்வுகள் ஆரம்பமாக இருக்கும் இத்தறுவாயில் அவர்கள் ஒருதலைப்பட்சமாகவும் தன்னிச்சையாகவும் ஒரு குழுவை அமைத்து ஒற்றுமையாகச் செயற்படுவதற்கான முயற்சியை வேண்டுமென்றே தகர்த்திருக்கின்றார்கள்.

அவர்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 15.02.2026 அன்று நடத்தப்பட்ட பகிரங்கக் கூட்டமும் இதே மாதிரியான முறையில் ஒற்றுமையான செயற்பாட்டை குழப்புவதற்காகவே நடத்தப்பட்டது என்பது தாங்கள் அனைவரும் அறிந்ததே.

19.02.2026 அன்று சுவிற்சலாந்து தூதரகத்தின் அனுசரணையோடு “மூடிய அறை” கூட்டத்துக்கு இணங்கிய பின் பகிரங்கக் கூட்டத்தை நடத்தி அந்த ஒற்றுமைக்கான முயற்சியை அவர்கள் ஏற்கனவே தகர்த்திருந்தனர். அதே பாணியில் தங்களது முயற்சியையும் இப்போது முறியடித்துள்ளனர்.

நாம் ஒற்றுமையாகச் செயற்பட எப்போதும் தயாராகவே இருக்கின்றோம் என்பதில் எவருக்கும் எந்தச் சந்தேகமும் எழாத வண்ணமே இதுவரை நாம் செயற்பட்டு வந்துள்ளோம். நிபுணர்களோடு செயற்படுவதற்கு கூடுதலான எண்ணிக்கையை அவர்கள் கடந்த கூட்டத்தில் கோரிய வேளையிலும் எமது இடங்களையும் அவர்களுக்கு விட்டுக் கொடுக்க நாம் தயாராக இருந்தோம் என்பதைத் தாங்களும் நன்கு அறிவீர்கள்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இப்படியாகத் தனித்துச் செயற்படுகிற பின்ணணியில் விரக்தியளிக்கும் விதத்தில் தங்களது முயற்சியைத் தொடர்வதினூடாக ஆக்கபூர்வமான அல்லது பயனுறுதிமிக்க விளைவுகள் ஏதேனும் எட்டப்பட முடியுமாயிருக்குமா என்பதைத் தயவு செய்து தெளிவுபடுத்துமாறு மிகவும் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம். - என்றுள்ளது. (அ)

## அமைச்சர் ஜயக்கொடி...

ஒதுங்கிக்கொள்ள முடியாது என ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவது என்பது, ஒரு குறிப்பிட்ட விடயம் தொடர்பாக அந்த அமைச்சர் பொறுப்பேற்பதைக் குறிக்கிறது. இது ஒரு முக்கியமான விடயமாகும். இது ஏதோ ஒரு அற்பமான அல்லது சில்லறைத்தனமான காரணத்திற்காக நடந்தது ஒன்றல்ல. பாரதூரமான, கடுமையான பிரச்னை ஒன்றில் தம்மால் ஏற்பட்ட தவறு அல்லது குறைபாட்டிற்கான பொறுப்பை ஏற்பதை இந்த இராஜினாமா உணர்த்துகிறது. இது ஒரு பாரிய நடவடிக்கையாகும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், இவ்வாறானதொரு செயல்முறை இடம்பெறுவது இதுவே முதல் முறையாகும். இது தொடர்பாக எந்தவிதமான பயனற்ற சாக்குப்போக்குகளை முன்வைப்பதில் அர்த்தமில்லை. ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணிகளில் அமைச்சரின் ராஜினாமா எந்த வகையிலும் செல்வாக்கு செலுத்தாது.

அது ஒரு போலித்தனமான காரணமாகும். பிரதான பிரச்னை என்னவென்றால், இந்த நிலக்கரி கொள்வனவுக்கு அமைச்சர் மாத்திரம் தான் பொறுப்பு கூற வேண்டுமா என்பதாகும். பொறுப்பை அமைச்சரின் மீது மட்டும் சுமத்திவிட்டு, அரசாங்கம் முற்றாக ஒதுங்கிக்கொள்ள முடியாது. அமைச்சர் மீது மாத்திரம் முழுப் பொறுப்பையும் சுமத்துவது எவ்வகையிலும் நீதியாகாது.

நிலக்கரி ஒப்பந்தம் வழங்கப்படும் போது, சம்பந்தப்பட்ட நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. பதிவு செய்யப்படாத ஒரு நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்க தீர்மானித்தது யார்? அந்தப் பொறுப்பை ஒட்டுமொத்த அரசாங்கமும் கூட்டாக ஏற்க வேண்டும்.

அத்துடன் விலைமனு வழங்கும் போது பாரம்பரிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பது தெளிவாகிறது. ஏதோ ஒரு உள்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, அந்தச் செயல்முறை அந்த குறிப்பிட்ட சந்தர்ப்பத்திற்கு மாத்திரம் திருத்தப்பட்டிருப்பது இங்கு புலனாகிறது. மறுபுறம், முழுச் செயல்முறையையும் ஒட்டுமொத்த அமைச்சரவையும் அங்கீகரித்துள்ளது.

இங்கு கொள்முதல் செய்யப்பட்டது ஒரு கப்பல் மாத்திரமல்ல, பல கப்பல்கள் ஆகும். அனைத்துக் கப்பல்களிலும் கொண்டு வரப்பட்ட நிலக்கரி தரமற்றது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. இருப்பினும், அனைத்துக் கப்பல்களையும் தொடர்ந்து பொறுப்பேற்றுக் கொண்டது.

ஒப்பந்தத்தின்படி, கப்பல்களில் கொண்டு வரப்பட்ட தரமற்ற நிலக்கரியை நிராகரிப்பதற்கான தெளிவான உரிமை இலங்கை அரசாங்கத்திற்கு இருந்தது. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்திற்குரிய அந்த உரிமையை நடைமுறைப்படுத்தாமல், தொடர்ந்து நிலக்கரி கப்பல்களை பொறுப்பேற்பது என்பது ஒட்டுமொத்த அரசாங்கத்தினதும் நிலைப்பாடே அன்றி, அமைச்சரின் தனிப்பட்ட முடிவாக இருக்க வாய்ப்பில்லை. இங்கு அமைச்சரை ஒரு பலிக்கடாவாக்கி, மற்ற அனைவரும் தங்களை சுத்தமானவர்களாகக் காட்டிக் கொள்ளும் முயற்சியே தெரிகிறது-என்றுள்ளது. (அ)

## ரஷ்யா செல்கிறார்...

ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள அரசாங்கம் எடுத்து வரும் தீவிர முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த விஜயம் அமையவுள்ளது.

## அநுரவும் குமார...

பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத் தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நிலக்கரி கொள்வனவு குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதி பூரண அதிகாரமிக்க ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார். முன்னாள் வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடியை பாதுகாப்பதற்காகவே இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல மீது தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அதனை ஆராய்வதற்கு அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமிக்கவில்லை. அதேபோல் 1978 ஆம் ஆண்டு முதல் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் குறித்து ஆராயுமாறு குறிப்பிடவில்லை.

கெஹெலிய ரம்புக்வெலவுக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடளிக்கப்பட்டது. விசாரணைகள் முறையாக இடம்பெற்றது. பதவியில் இருக்கும்போதே அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால் குமார ஜயக்கொடி விவகாரத்தில் இவ்வாறு ஏதும் நடக்கவில்லை.

தரமற்ற நிலக்கரி குறித்து விசாரிப்பதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு ஒருபோதும் உண்மையை வெளிப்படுத்தாது. உண்மையை மூடிமறைப்பதற்காகவே ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும். கடந்த காலங்களிலும் இவ்வாறான நிலைமையே காணப்பட்டது.

தரமற்ற நிலக்கரி விவகாரத்தில் ஜனாதிபதி உட்பட குமார ஜயக்கொடி எதிர்காலத்தில் சிறை செல்ல நேரிடும். அடுத்த அரசாங்கத்தில் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் வழக்குத் தாக்கல் செய்வோம். இந்த அரசாங்கத்தில் எந்த நிறுவனங்கள் மீதும் எமக்கு நம்பிக்கையில்லை-என்றார். (அ)

## கீரிமலை கடலில்...

குளித்துள்ளார்.

இதன்போது திடீரென நீரில் மூழ்கியுள்ளார். இந்நிலையில் அவரை தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதன் பின்னர் சிறிது நேரத்தில் அவரது சடலம் கரையொதுங்கியது.


அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதற்கு முயற்சி!

## கடுமையாக சாடினார் கர்தினால் மல்கம்



கொழும்பு, ஏப். 20

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு முட்டுக்கட்டை போட முயற்சிப்பவர்கள் குறித்து கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கவலை வெளியிட்டுள்ளார்.

2019 ஏப்ரல் 21 அன்று நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவர் விசேட செய்தி ஒன்றை விடுத்துள்ளார்.

அரசியல் காரணங்களுக்காக உண்மைகளை மறைக்க முற்படும் சக்திகள் விசாரணைகளைத் திசை திருப்ப முயற்சிப்பதாகக் குறிப்பிட்டுள்ள அவர், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்ய பொதுமக்கள் ஒன்றிணைந்து ஆதரவு வழங்க வேண்டும் எனவும் பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

278 பேரின் உயிர்களைப் பறித்து, சுமார் 500 பேரை காயப்படுத்திய இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் யார் என்பது குறித்தும், அவர்களின் உண்மையான நோக்கம் என்ன என்பது குறித்தும் இன்னும் தெளிவான விடைகள் கிடைக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டினார். உண்மைகளை மறைக்க முற்படும் எந்தவொரு முயற்சியையும் முறியடித்து, நீதிக்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அவர் தனது செய்தியில் வலியுறுத்தியுள்ளார். (அ)

# யாழில் கைத்துப்பாக்கியுடனும் கஞ்சாவுடனும் ஒருவர் கைதானர்!

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ்ப்பாணத்தில் சிறிய ரக கைத்துப்பாக்கியுடனும் ஒரு தொகை கஞ்சாவுடனும் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வல்வெட்டித்துறை பகுதியில் வீடொன்றில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக தமக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் வீட்டைச் சோதனையிட்டபோது , ஒரு தொகை கஞ்சாவும் , சிறிய ரக கைத்துப்பாக்கி ஒன்றினையும் மீட்டதாகவும், அதனை அடுத்து வீட்டில் இருந்த குடும்பஸ்தரை கைது செய்ததாகவும் வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# இந்தியத் துணை ஜனாதிபதி சஜித் பிரேமதாஸவுடன் சந்திப்பு



கொழும்பு, ஏப். 20

உத்தியோகபூர்வ இரு தரப்பு விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய துணை ஜனாதிபதி சி. பி. இராதாகிருஷ்ணனை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சந்தித்து பேச்சு நடத்தினார்.

"தமது முதலாவது உத்தியோகபூர்வ இரு தரப்பு விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய துணை ஜனாதிபதி சி. பி. இராதாகிருஷ்ணனை இலங்கைக்கு அன்புடன் வரவேற்கிறோம்.

வர்த்தகத்தை விரிவாக்கம் செய்தல், பொருளாதார தொடர்புகளை விரிவுபடுத்துதல் மற்றும் இரு நாடுகளுக்கும் பயனளிக்கக்கூடிய நடைமுறை ரீதியான வாய்ப்புகளை திறப்பது தொடர்பாக ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் நாம் ஈடுபட்டோம்.

இலங்கையும் இந்தியாவும் வெறும் அண்டை நாடுகள் மட்டுமல்ல, பொதுவான வரலாறு, பொதுவான சவால்கள் மற்றும் பொதுவான எதிர்காலம் கொண்ட உண்மையான கூட்டாளர்களுமாவர். அனைத்து குடிமக்களுக்கும் இந்த கூட்டுறவின் பலன்களை அடைவதற்காக அதீத அபிலாஷைகள், உறுதியான நோக்கம் மற்றும் நம்பிக்கையுடன் முன்னேற வேண்டிய தருணம் தற்போது வந்துள்ளது" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்த சந்திப்பின் பின்னர் தெரிவித்தார். (அ)

# இந்தியத் துணை ஜனாதிபதி பிரதமர் ஹரிணியுடன் பேச்சு

கொழும்பு, ஏப். 20

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று காலை இலங்கை வந்தடைந்த இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஸ்ணன், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவைச் சந்தித்து இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நாகரீகப் பாரம்பரியங்கள் குறித்து இதன்போது நினைவு கூர்ந்த தலைவர்கள், இரு நாட்டு மக்களிடையிலான உறவுகள் உட்பட இருதரப்புத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து விரிவாகக் கலந்துரையாடினர்.

உயர்மட்ட இராஜதந்திரக் குழுவினருடன் வருகை தந்துள்ள துணை ஜனாதிபதி, தனது இரண்டு நாள் விஜயத்தின் போது பல்வேறு அரசியல் மற்றும் சமூகத் தலைவர்களையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார். (அ)

# இந்திய வீடமைப்பு திட்டத்தின் 3 ஆம் கட்டம் நிறைவு பெற்றது

கொழும்பு, ஏப். 20

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வந்த இந்திய வீடமைப்புத் திட்டத்தின் மூன்றாம் கட்டம் நேற்று உத்தியோகபூர்வமாக நிறைவு பெற்றது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஸ்ணன் தலைமையில் இணையவழி ஊடாக நடைபெற்ற விசேட நிகழ்வின் போது, எஞ்சியிருந்த 145 வீடுகள் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 4,000 வீடுகளை நிர்மாணிக்கும் நோக்கில் இந்த மூன்றாம் கட்டத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கொரோனா பெருந்தொற்று மற்றும் இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக வீடொன்றிற்கான செலவை 2.8 மில்லியன் ரூபாயாக இந்திய அரசாங்கம் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் இதுவரை 3,855 குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன. பெருந்தோட்டப் பகுதிகளில் மொத்தம் 60,000 வீடுகளை நிர்மாணிக்கும் இந்திய அரசின் இலக்கில், முதல் இரண்டு கட்டங்களில் 46,000 வீடுகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (அ)

# வயலில் ஆணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 20

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு முன்னால் உள்ள வீதியில் காணப்படும் வயலில் இருந்து ஆணொராவரது சடலம் உருக்குலைந்த நிலையின் நேற்று மீட்கப்பட்டது.

சடலமாக காணப்படுபவர் யாரென தெரியவராத நிலையில், அவருக்கு அண்ணளவாக 50 வயது இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

அவரது சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-05)

# சந்தன கத்ரியாராச்சிக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஏப். 20

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்தன கத்ரியாராச்சியை 30 நாள்கள் விளக்கமறியலில் வைக்க கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருள்களுடன் இவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கடுகதி ரயிலில் மோதுண்டு ரஷ்ய நாட்டு யுவதி மரணம்!

கொழும்பு, ஏப். 20

பெலியத்தையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கடுகதி ரயிலில் மோதுண்டு ரஷ்ய நாட்டு யுவதி ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

அஹங்கம, கபலான ரயில் கடவையில் மின்சார மோட்டார் சைக்கிளில் பயணித்த போதே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்து இடம்பெற்ற போது ரயில் கடவையின் சமிஞ்சை விளக்குகள் முறையாகச் செயற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த சம்பவம் தொடர்பாக அஹங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்கள் மீது கடும் நடவடிக்கை

கொழும்பு, ஏப். 20

பஸ்ஸில் பயணிப்பவர்களிடம் அதிக கட்டணம் வசூலிக்கும் அல்லது பயணச் சீட்டுகளை வழங்க மறுக்கும் பஸ் நடத்துநர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

பயணிகள் இதுபோன்ற அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கும்பட்சத்தில் 1955 எனும் 24 மணி நேர அழைப்பு இலக்கத்துக்கு நேரடி தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும்.

இந்த விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதி வரை 24 மணிநேரமும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஆட்பதிவுத் திணைக்களத்தின் சேவை இன்று முதல் வழமைக்கு

கொழும்பு, ஏப். 20

ஆட்பதிவுத் திணைக்களத்தின் அனைத்து பொதுச் சேவைகளும் இன்று மீண்டும் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய அடையாள அட்டைகள் வழங்கும் ஒரு நாள் சேவையும் அதற்குள் அடங்கும்.

திணைக்களத்தின் கணினி அமைப்பில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக இந்தச் சேவைகள் ஏப்ரல் 17 முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தொழில்நுட்பச் சீரமைப்புக்குப் பிறகு, பாதிக்கப்பட்ட அனைத்து சேவைகளும் இன்று முதல் சரிசெய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் என்று திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.